# ஆன்மாவிற்கு அனைத்தும் இனிமையானது

பிரம்மர்ஷி பிதாமகர்
பத்ரிஜி

பூமிப் பயணம் மேற்கொண்ட நாம் அனைவரும் யாத்திரிகர்கள்!
இந்த பூமியில் இருக்கும் சிறப்புகளை, அதிசயங்களைக் கண்டு களிக்க வந்தோம். நிம்மதியாக பார்த்துச் செல்வோம். சென்றபின் மீண்டும் வருவோம். மேலும் சில சிறப்புகளைக் கண்டுகளித்துச் செல்வோம்.
இப்படி வருவதும் போவதும்... போவதும் வருவதும்... பார்க்க வேண்டிய அதிசயங்கள் அனைத்தையும் பார்த்து முடித்த பின், இறுதிப் பிறவியில், நாமே இங்கு சில அதிசயங்களை, சிறப்புகளை உருவாக்குவோம். புதியதை உருவாக்கும் வரை வந்து போகும் இந்தப் பயணம் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும்.
இந்தப் பயணத்தில் நாம் எடுக்கும் ஒவ்வொரு பிறவியும், நம் ஆன்மாவிற்கு முன்னேற்றத்தை அளிக்கும் ஞானத்தின் ஏணிப்படிகள்.
வந்து போகும் இந்த விளையாட்டில், ஆன்ம ஞானிக்கு எங்கும் ஆபத்து என்பதே இல்லை. ஆகையால், ஆன்ம ஞானிக்குக் காப்பாற்றுபவர் தேவையில்லை; காப்பாற்றுபவர் என்று யாருமில்லை; காப்பாற்றப்பட வேண்டியதுமில்லை. உள்ளவை அனைத்தும் அனுபவங்கள்தான்!

ஸ்ரீ கிருஷ்ணர் பகவத் கீதையில், "அர்ஜுனா போரில் இறந்தால், நீ வீர சொர்க்கத்தை அடைவாய்; வெற்றி பெற்றால் ராஜ போகங்களை அனுபவிப்பாய். எப்படி பார்த்தாலும் உனக்கு நன்மையே!
ஆன்ம ஞானிக்கு ஒவ்வொரு பிறவியிலும் வரும் ஒவ்வொரு சங்கடங்களும், ஒவ்வொரு பிரச்சனைகளும் அனுபவங்கள்தான். அந்த அனுபவங்களில் இருந்துதான் அவன் அஜாக்கிரதையிலிருந்து ஜாக்கிரதையாக அடியெடுத்து வைத்து முன்னேறுவான்.
சிறு குழந்தை ஒவ்வொரு நாளும் வளர்ந்து பெரியவன் ஆவதைப் போன்றே, ஒரு ஆன்ம ஞானிகூட ஒவ்வொரு பிறவியிலும் தான் பெரும் அனுபவங்களுடன் வளர்ந்து கொண்டிருப்பான். பாடப்பாட ஸ்வரங்கள் சுகமாவதைப் போன்று, கேட்க கேட்க தெளிவடைவது போன்று, அறியாமையிலிருந்து ஞானத்தை அடைகிறான்.
உலகியலில் இருக்கும்போது, நாம் அறியாமையில், உள்ளவை அனைத்தும் ஆபத்துகள் என்று எண்ணுகிறோம். பாதுகாப்பிற்காகப் போராடுகிறோம். ஆன்மிகத்தில் இருக்கும்போது நிகழ்காலத்தில் ஆனந்தமாக வாழ்கிறோம்! நிகழ்காலத்தில் எப்போதும் ஆபத்துகள் இல்லை.எதிர்காலம் பயங்களுடன்கூடிய பந்தங்களைக் காட்டினால், நிகழ்காலம் பயமற்ற முக்தியைக் காட்டுகிறது. வாழ்க்கையில் உற்சாகம் நிரம்பும். ஆகையால் நாம் எப்போதும் நிகழ்காலத்தில் வாழ்ந்து வாழ்க்கையை உற்சாகப்படுத்த வேண்டும்.
ஆன்மாவின் வடிவங்களான நாம், மனிதர்களாக பல பிறவிகளை எடுத்து, எடுத்து இயற்கையுடன் இணைந்து, இணைந்து .. இறுதியில் அந்த இயற்கையை வெல்லும் கடவுள்மார்களாகிறோம். ஜீவாத்மாக்களான நாம் பரமாத்மாக்களாக முன்னேறுகிறோம்!
ஆன்மாவின் வந்து போகும் இந்த உயரிய ஆட்டத்தில்,
நமக்கு புகழ்தலும் இல்லை இகழ்தலும் இல்லை;
இன்பமும் இல்லை இன்பமும் இல்லை;
அதிர்ஷ்டம் இல்லை துரதிருஷ்டம் இல்லை;
ஆபத்தும் இல்லை பாதுகாப்பும் இல்லை;
வெறுமையும் இல்லை வெற்றிடமும் இல்லை;
பிறப்பும் இல்லை இறப்பும் இல்லை.

ஒவ்வொரு பிறவியிலும் ஆன்மாவிற்கு உள்ளவை அனைத்தும் அனுபவங்கள்தான். ஒவ்வொரு பிறவியும் ஆன்மாவிற்கு அனுபவ ஞானத்தின் ஏணிப்படிகள்! எனவே, ஆன்மாவிற்கு வெறுமையும் இனிமைதான் வெற்றிடமும் இனிமைதான். மானமும் இனிமைதான் அவமானமும் இனிமைதான். நிரந்தரமாக இருப்பதும் இனிமைதான் நிரந்தரம் அல்லாததும் இனிமைதான். குடும்ப வாழ்க்கையும் இனிமைதான் முக்தி நிலையும் இனிமைதான். லட்சியமும் இனிமைதான் இந்த உடலும் இனிமைதான். பிறப்பும் இனிமைதான் இறப்பும் இனிமைதான். ஆகவே அனைத்தும் இனிமைதான்! ஆகவே ஒவ்வொரு நொடியும் ஆன்ம ஞானிகளாக நிகழ்காலத்தில் இருந்து, வாழ்க்கையை இனிமையிலும் இனிமையாக மாற்றிக் கொள்வோம்.

